**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No. 5/2021**
**Prosecution Witness : PW 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : அந்தோணிசாமி | | : |
| Father / Husband Name | : தாமஸ் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( A1 to A3 absent. Counsel filed petition U/s.317 Of Cr.P.C. Petition heard and allowed. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **09/05/2024**

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது எண். 1/601, பாலகணேசன் நகர், செங்குன்றம் என்ற முகவரியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2018ஆம் ஆண்டு தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாளில் மதியம் சுமார் 3 மணிக்கு விளாங்காடுபாக்கம் அருகிலுள்ள கால்நடை மருத்துவமனை அருகே சென்று கொண்டிருந்த போது சண்டை நடந்து கொண்டிருந்தது. அதற்கு ஒரு பையனை பிடித்து வைத்திருந்தார்கள். பெட்ரோல் பங்க் அருகே சண்டை நடந்தது. அதற்காக என்னிடம ' கையொப்பம் கேட்டார்கள். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் அசா.ஆ.4 மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** போலிசார் பிடித்து வைத்திருந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில் )**

நான் போலிசார் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். போலிசார் பிடித்து வைத்திருந்த நபரின் உயரம் குறித்து எனக்கு சரியாக சொல்ல முடியாது. எனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. நான் ஆட்டோ ஓட்டுவதால் போலிசார் கேட்டதன் பேரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.